செ.வெ.எண்:26 / ஜுன் /2020 நாள்:09.06.2020

**திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்:**

**----------------**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தொடர்பாக 116 நபர்கள் சிகிச்சை பெற்று வந்தனர். இதுவரை 100 நபர்கள் பூரண குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். திருச்சி மாவட்டத்தினை சார்ந்த நபர் ஒருவர் ESI மருத்துவமனை கோயம்புத்தூரில் சிகிச்சை பெற்று, பூரண குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தினை சார்ந்த 101 நபர்கள் குணமடைந்துள்ளனர்.

இன்று(09.6.2020) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை சார்ந்த 04 நபர்களுக்கும், கொரோனா வைரஸ் நோய் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒரு நபர் சென்னையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தேவையில்லாமல் வெளியில் நடமாடுவதை பொது மக்கள் தவிர்க்க வேண்டும். **விழித்திரு - விலகி இரு - வீட்டில் இரு** என்பதை கடைபிடிக்க வேண்டும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை கொரோனா வைரஸ் நோய் இல்லாத மாவட்டமாக மாற்றுவதற்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

**வெளியீடு :**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**